**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 209/2013**
**நாள்.13.02.2025**
**வா.சா.1- சுப்பம்மாள்**
**க/பெ - தங்கராசு**

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 13.02.2025 ம் தேதி என்னால் சாட்சியம்சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1ம் வாதி தங்கராசு எனது கணவர். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் நானும், எனது வாரிசுகளும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்படும்போது நானும், எனது வாரிசுகளும் அந்த இடத்தில் இல்லை. மாற்றுப்பரிகாரமாக தொகை ரூ.70000/- கேட்டுள்ள விவரம் பற்றி எனக்கு தெரியும்.

கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டதற்கு பின்னர் 1ம் பிரதிவாதி எங்கு இருக்கிறார் என்பது பற்றி தெரியவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய உடன்படிக்கையில் 2, 3 பிரதிவாதிகள் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் வாதி 1ம் பிரதிவாதிக்கு கிரைய உடன்படிக்கை எழுதிக்கொடுத்த விவரம் 2,3 பிரதிவாதிகளுக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

1ம் வாதி வழக்கு தொடர்பாக 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பிய விவரம் பற்றி என்னிடம் கூறினார். 1ம் பிரதிவாதி அறிவிப்பை வாங்க மறுத்துவிட்டதாக என் கணவர் என்னிடம் தெரிவித்திருந்தார். 1ம் பிரதிவாதி ஒரு வருடமாக ஊரில் இல்லை என்றும் சென்ற இடம் தெரியவில்லை என்றும் தான் அறிவிப்பு திருப்பப்பட்டுள்ளது என்றால் 1ம் பிரதிவாதி அங்கு இருந்துகொண்டே இல்லை என அறிவிப்பை திருப்பி அனுப்பி வைத்தார். 1ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு விளம்பர நாளிதழ் மூலமாக அறிவிப்பு செய்தோமா என்றால் இல்லை. கிரைய பாக்கி தொகை

ரூ.30000/- ஐ நான் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்றால் வைப்பீடு செய்ய தயாராக உள்ளேன். தாவா சொத்தில் 2,3 பிரதிவாதிகள் தற்போது இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை நான் பார்த்ததில்லை. தாவா சொத்தை தவிர பிரதிவாதிகளுக்கு வேறு சொத்து எதுவும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் சுப்பிரமணிக்கு எதிராக மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருந்தது என்றால் சரிதான்.

தற்போது தாவா சொத்தின் மதிப்பு பல மடங்கு அதிகரித்துவிட்டது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்திற்கு முன் 1ம் பிரதிவாதியை பார்த்துள்ளேனா என்றால் 2,3 முறை பார்த்துள்ளேன். 1ம் பிரதிவாதி மது பழக்கத்திற்கு அடிமையானவர் என்று 2,3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மது பழக்கத்திற்கு அடிமையானவர் என்ற காரணத்தினால் மோசடியாக கிரைய உடன்படிக்கையை 1ம் வாதி எழுதிக்கொண்டார் என்றால் சரியல்ல.

2,3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தைத் தவிர வேறு சொத்து இல்லாததால் முன் தொகை ரூ.70000/- செலுத்த தயாராக உள்ளார்கள் என்றால் சொத்துதான் எங்களுக்கு வேண்டும். கிரைய பாக்கித்தொகையை தற்போது வரை செலுத்தாத காரணத்தினால் முன் தொகை மட்டும் தான் பெற நாங்கள் தகுதியானவர்கள் என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

VANJI NATHAN R — Digitally signed by VANJI NATHAN R

**Principal District Munsif**
**Vedasandur**